# 04 சூழலும் பொறுப்புள்ள மனுக்குலமும்

**வாசிப்போம்**
திருப்பாடல்கள்
*67:6, 85:12, 145: 8-11*





இலவச விநியோகத்திற்காக

மேற்காட்டப்பட்ட செய்திகள், தற்போது அன்றாடம் நாம் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் பார்க்கும், கேட்கும், வாசிக்கும் விடயங்களாகும். இவை நமக்குத் தெரிவிக்கும் செய்தி யாது? மனுக்குலம் சூழலை மாசுறச்செய்கிறது. கடவுள் மனுக்குலத்தை நேசித்து பொறுப்புடன் பாதுகாத்து பயன்படுத்த வழங்கிய கடவுளின் மகத்தான படைப்புகளான நீர், நிலம், வளி ஆகியன மனிதரின் பொறுப்புணர்வற்ற சுயநல செயற்பாடுகளினாலும், அறியாமையினாலும் மாசடைகின்றன. இதனால் மனுக்குலம் உட்பட அனைத்து உயிரினங்களும் அன்றாடம் சாவை எதிர்நோக்குகிறது.

கடவுள் இப்புவியை படைத்தபோது, யாவற்றையும் நன்மையானதாகவும், முழுமையானதாகவும் படைத்தார்.

நானிலம் தன்பலனை ஈந்தது: கடவுள், நம் கடவுள் நமக்கு ஆசி வழங்கினார்.
திருப்பாடல் 67: 6

மனுக்குலமானது, தமது அன்றாட தேவைகளுக்கு ஏனைய படைப்பில் தங்கி, இயற்கையுடன் சார்ந்து வாழும் பொருட்டு, சூழலைக் கடவுள் படைத்தார். நாம் சுவாசிக்க வளியும், பருகுவதற்கு நீரும், உண்ணுவதற்கு உணவும், மற்றைய தேவைகட்கு நாம் பாவிக்கும் மூலப்பொருட்களையும், சூழலிலிருந்தே பெறுகிறோம். மனித வாழ்வுக்கும், நிலைப்பாட்டுக்கும், உயர்வுக்கும் கடவுள் படைத்த சூழல் இன்றியமையாததாக உள்ளது.


நல்லதையே ஆண்டவர் அருள்வார். நல்விளைவை நம் நாடு நல்கும்.
திருப்பாடல் 85:12

துரதிஷ்டவசமாக, தற்காலத்தின், துரிதமான தொழிநுட்ப விருத்தியானது, பலவழிகளில் கடவுளின் படைப்பின் மேன்மையையும், முழுமையையும், சூழல் சமநிலையையும் மதிக்கத் தவறிவிட்டது. 21ம் நூற்றாண்டில் வாழும் மனிதர், தமது வாழ்க்கையை இலகுவாகவும், வினைத்திறனாகவும் நடத்தக்கூடிய பல வழிகளைக் கண்டு பிடித்துள்ளானர். இவை நன்மையானதாக இருந்தாலும் அவன் வாழும் சூழலிலேயே விரும்பத்தகாத விளைவை ஏற்படுத்தியுள்ளதைக் காணத் தவறுகிறான்.

'ஆதலால், நாடு புலம்புகிறது. அதில் குடியிருப்பன எல்லாம் நலிந்து போகின்றன. காட்டு விலங்குகளும் வானத்துப் பறவைகளும், கடல் வாழ் மீன்களும் கூட அழிந்து போகின்றன. ஓசேயா 4:3

பொறுப்புள்ள படைப்பு பராமரிப்பில் ஈடுபடவேண்டிய மனிதர், தன்னல நோக்குடன் படைப்புகளை முகாமைத்துவம் செய்வதால், கொடிய நோய்களும், நீர் நில வாழ் அங்கிகளின் அழிவும், பச்சை இல்ல வாயுக்களின் அதிகரிப்பும் ஏற்படுகிறது. இதனால் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுவதால் திடீர் காலநிலை மாற்றங்களும், வெள்ளப்பெருக்கு, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களும் ஏற்படுகின்றன.

## சூழல் பாதுகாப்பு கடவுளின் விருப்பும், நமது கடமையுமாகும்




படைப்பு பராமரிப்பு பொறுப்பைக் கட்டளையாகக் கடவுளிடம் பெற்ற மனிதர், சூழலை மாசுறச் செய்வதுடன், சூழல் பாதுகாப்பில் அக்கறை காட்டாமல் இருப்பதும் கடவுளுக்கு எதிரான செயல்களாகும். சூழல் மாசடைதலைத் தவிர்க்கும் செயலானது கடவுளின் விருப்பச் செயலாகவும், ஒருவரை ஒருவர் நேசிக்கும் செயலுக்கு அடையாளமாகவும் இருக்கிறது.

சூழல்பாதுகாப்பு பற்றிய மனுக்குலம் சமூக அக்கறையையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த விரைந்து செயல்பட வேண்டும். மனுக்குலத்தின் அறியாமையைப் போக்கி, சுயநலவாதிகளின் சூழலை மாசுறச் செய்யும் செயற்பாடுகளைத் தடுக்க முன்வரல் வேண்டும்.

போர், அணுகுண்டு ஏவுகணைப் பரிசோதனைகள் பெருமளவு சூழலை மாசடையச் செய்கின்றன. இதனைத் தடுப்பதற்கு உலகளவில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதோடு சூழல் பாதுகாப்பு நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல் நமது முக்கிய கடமையாகும். இதன் மூலம் நாம் கடவுளுக்கு பிரியமானவர்களாக வாழலாம்.

"ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர். எளிதில் சினம் கொள்ளாதவர். பேரன்பு கொண்டவர். ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர். தாம் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுபவர். ஆண்டவரே, நீர் உருவாக்கிய யாவும் உமக்கு நன்றி செலுத்தும். உம்முடைய அன்பர்கள் உம்மைப் போற்றுவார்கள்." திருப்பாடல்கள் 145: 8-10



## தீர்மானிப்போம்

- சூழல் மாசடைதலை தடைசெய்து, பொறுப்புடன் பராமரிக்க முன் வருவோம்.
- சூழலை அழிப்போரைத் தடுப்பதற்காக சூழல் பாதுகாப்பு பற்றிய சமூகவிழிப்புணர்வை வழங்கும் பணியில் ஈடுபடுவோம்.



## நினைவில் வைத்திருப்போம்

- மனுக்குலம் சூழலை மாசுறச் செய்வதால் முழு உலகமும் நிச்சயமற்ற ஓர் எதிகாலத்தை நோக்குகிறது.
- கடவுள் உருவாக்கிய சூழல் மனுக்குல வாழ்வின் உயர்வுக்கு அவசியமானதால் அதனைப் பாதுகாத்து பராமரிப்பது நமது கடமையாகும்.
- சூழலை மாசடையச் செய்யும் செயற்பாடு கடவுளுக்கு எதிரானதும், அதனைத் தவிர்க்கும் செயல்கள், கடவுள் மனிதரிடம் எதிர்பார்க்கும் கடமையும், விருப்புச் செயலாகவுமிருக்கிறது.
- சுயநலநோக்குடனும், அறியாமையினாலும், சூழலை மாசடையச் செய்யும், திட்டமிடப்பட்ட செயற்பாடுகளைத் தடுக்க மனுக்குலம் முழுவதும் இணைந்து செயற்பட வேண்டும்.
- நிலம், நீர், வளி மாசடைவதைத் தடுப்பதற்காக மனுக்குலம் பொறுப்புடன் செயற்பட்டு, பக்தியின் வெளிப்பாட்டை காட்டவேண்டும்.



## உங்களுக்குத் தெரியுமா?

- ஏப்ரல் மாதம் 22ம் திகதி புவி நாளாக ஐ.நா.சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
- கடந்த காலத்தில் நோபல் சமாதானப் பரிசு காலநிலை மாற்றம் தொடர்பில் உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக, ஐ.நா. சபையின் அரசுகளுக்கு இடையிலான குழுவுக்கு கிடைத்தது.
- புவி வெப்பநிலை உயர்வினால், பெரும்சூறாவளி, வெள்ளப்பெருக்கு, கொடியவரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் தோன்றி, 2100ம் ஆண்டளவில் பெரும் எண்ணிக்கையான உயிரினங்கள் அழிந்துவிடலாம் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.
- சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களே புவி வெப்பமடைதலை தடுக்கக் கூடிய தீர்வாகும்.

## செயற்பாடு

1. சூழலை மாசடையச் செய்பவர்களை மனதில் கொண்டு "கடவுள் படைத்த சூழலின் பாதுகாவலர் நாம்" என்பது தொடர்பாகப் பத்திரிகைக்கு ஓர் கடிதம் எழுதுக.

2 சூழலை மாசடையச் செய்யும் மனுக்குலத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளைத் தேடிப் பெறுக.

3. பாடசாலை மட்டத்தில், சமூக மட்டத்தில் சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வுத் திட்டம் ஒன்றை குழுவாக முன்வைக்க.

4. இலங்கையிலும், உலகலாவிய ரீதியிலும், சுற்றாடல் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் சில நிறுவனங்களை அறிந்து அவற்றின் செயற்பாடுகள் பற்றிய ஒரு சுருக்கமான அறிக்கை தயாரிக்க.